FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8364152

1. District மாவட்டம் Namakkal PS. V&AC காவல்நிலையம் Year ஆண்டு 2026 FIR No முதல் எண் 04/AC/2026 Date: நாள் 02.06.2026

2. (i) Act சட்டம் The Prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள் 7(a)
(ii) Act சட்டம் Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம் Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் Date to நாள் வரை: 12.05.2026 at about 1830hrs
Time Period நேர அளவு Time from நேரம் முதல் Time to: 29.05.2026 at about 1800hrs
(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 02.06.2026 Time நேரம்: 08.55 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II Time நேரம்: 0930 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 1.5 kms, East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் —
(b) Address : முகவரி Namakkal Municipal Corporation

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் B. Boopathi vasan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Balakrishnan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-33 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Private Job (g) Address : முகவரி 3/137-1, Porasapalayam Siluvampatti (PO), Namakkal.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Udhayakumar, Revenue Assistant, Namakkal Municipal Corporation.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Delay by the Informant.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted,

Separate sheets Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B.Boo 2/6/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

2/6/26

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 02.06.2026 1000hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S.PRABHU
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police,
V&AC, Namakkal.

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 04/AC/2026, u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...,

இன்று 02.06.2026-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 8.55 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது, வழக்கின் புகார்தாரர் திரு.B.பூபதிவாசன், த/பெ. பாலகிருஷ்ணன், க.எண்.3/137-1 பொரசபாளையம், சிலுவம்பட்டி (PO), நாமக்கல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் B. பூபதிவாசன், த/பெ. பாலகிருஷ்ணன், க.எண்.3/137-1 பொரசபாளையம், சிலுவம்பட்டி (PO), நாமக்கல். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, நாமக்கல். ஐயா, நான் நாமக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பொரசபாளையத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் நாமக்கல்லில் உள்ள தனியார் இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். 2021-ம் வருடம் சிலுவம்பட்டி கிராம சர்வே எண்.413/1-ல் போடப்பட்டுள்ள வீட்டுமனை பிரிவில் 1200 சதுரடி அளவுள்ள மனை எண். 33-ஐ ஈரோட்டை சேர்ந்த பழனிச்சாமி என்பவரிடமிருந்து நாமக்கல் எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1317/2021-ன்படி எனது பெயரில் கிரையம் பெற்றேன். அந்த வீட்டுமனையில் வீடுகட்ட அனுமதி பெறுவதற்காக 2025 செப்டம்பர் மாதத்தில் ஆன்லைனில் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.1,28,960/- செலுத்தி, அனுமதிபெற்று தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய 1800 சதுரடி அளவில் வீட்டை போன மாதம் கட்டி முடித்தேன். அதன்பிறகு 12.05.2026-ம் தேதியன்று மதியம் சுமார் 1 மணியளவில் எனது புதிய வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்வது சம்மந்தமாக நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்திலிருந்து வருவாய் உதவியாளர் திரு.உதயகுமார் என்பவர் நேரில் வந்து எங்கள் புதிய வீட்டை அளந்து பார்த்துவிட்டு, என்னிடம் நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்திற்கு வந்து

அவரை பார்க்குமாறு சொல்லிவிட்டு அவரது செல்போன் நெம்பரை என்னிடம் கொடுத்துவிட்டு சென்றார். நான் அன்று மாலை சுமார் 6.30 மணிக்கு நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள அவரது இருக்கைக்கு சென்று அவரை நேரில் பார்த்தபோது, எனது புதிய வீட்டிற்கு சொத்துவரி விதிப்பதற்கான விண்ணப்பத்தை அவரே தனது கைப்பட எழுதி என்னிடம் கொடுத்து அதில் எனது கையெழுத்திட்டு, ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டி நாளை கவுண்ட்டரில் கொடுக்குமாறு சொன்னார். அப்போது அவர் என்னிடம், தனக்கு தனியாக 25,000/- ரூபாய் கொடுத்தால் உடனே உங்கள் புதிய வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்து தந்துவிடுகிறேன் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் இப்போது அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னதற்கு, சரி ஒரு 15,000/- கொடுத்து விடுங்கள் என்றும், இப்போது எவ்வளவு பணம் இருக்கிறதோ அதை கொடுத்துட்டு போங்க என்றும் வற்புறுத்தி கேட்டார். அதனால் நானும் வேறுவழியில்லாமல் அப்போது என்னிடமிருந்த பணம் ரூ.7,000/-த்தை அவரிடம் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். மறுநாள் 13.05.2026 அன்று மதியம் சுமார் 12.15 மணிக்கு நாமக்கல் மாநகராட்சி அலுவலகம் சென்று அங்குள்ள வரி வசூல் செய்யும் கவுண்ட்டரில் எனது புதிய வீட்டின் சொத்துவரி விதிப்பு விண்ணப்பத்தை கொடுத்தேன். அங்கிருந்த பெண் பணியாளர் எனது விண்ணப்பத்தை வாங்கி படித்து பார்த்துவிட்டு பணம் இருநூறு ரூபாய் கொடிநாள் நிதியாக கட்டுமாறு சொன்னார். அதனால் நான் ரூ.200/- பணம் கட்டினேன். அதற்காக தலா நூறு ரூபாய்க்கு இரண்டு கொடிநாள் ரசீதுகளை அவர் போட்டு கொடுத்தார். நானும் ரசீதை வாங்கிகொண்டு வந்துவிட்டேன். அதன்பிறகு இரண்டு, மூன்று முறை வருவாய் உதவியாளர் திரு.உதயகுமாருக்கு போன் செய்து எனது சொத்துவரி சம்மந்தமாக கேட்டபோது நேரில் வாங்க பேசிக்கலாம் என்றும், சீக்கிரம் அதிகாரிகளிடம் அப்ரூவல் வாங்கி முடித்து தருகிறேன் என்றும் சொல்லிவந்தார். அதனால் நான் அவரை நேரில் பார்க்கலாம் என்று 29.05.2026-ம் தேதி மாலை சுமார் 6 மணிக்கு நாமக்கல் மாநகராட்சி அலுவலக முதல் தளம் சென்று அவருடைய இருக்கையில் பார்த்தபோது, அவர் அங்கு இல்லாததால் அவருக்கு போன் செய்து சார் உங்களை பார்க்க உங்கள் ஆபிஸ்க்கு வந்துள்ளேன் என்று

சொன்னபோது, தான் தரைதளத்தில் இருப்பதாகவும், கீழே இறங்கி வருமாறும் சொன்னார். எனவே நான் கீழே சென்று அவரை நேரில் பார்த்தபோது என்னிடம் பணம் கொண்டுவந்தீங்களா என்று கேட்டார். அதற்கு நான் பணம் கொண்டுவரவில்லை என்றும், எவ்வளவு பணம் சார் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டேன். அதற்கு அவர் ஏற்கனவே ஏழாயிரம் ரூபாய் கொடுத்திருக்கீங்களா என்று கேட்டதற்கு, நான் ஆமாம் என்று சொன்னேன், அதற்கு அவர் இன்னும் ஒரு எட்டாயிரம் ரூபாய் கொடுத்திடுங்க என்று சொன்னார். நான் எட்டாயிரமா என்று கேட்டதற்கு, ஆமாம் அதான் எற்கனவே உங்களுக்கு பத்தாயிரம் குறைச்சிட்டேனே என்று சொன்னார். அந்த பணத்தை கொடுத்தால் உடனே பைல் அப்ரூவல் வாங்கி, உங்க ஏரியா டேங்க் ஆப்பரேட்டரிடம் கொடுத்துவிடுகிறேன் என்றும் சொன்னார். அதற்கு நான், ஒன்றாம் தேதி சம்பளம் வந்த பிறகு தான் பணம் கொடுக்க முடியும் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னுடைய புதிய வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்து தருவதற்கு நாமக்கல் மாநகராட்சி அலுவலக வருவாய் உதவியாளர் திரு.உதயகுமார் என்பவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக ரூ.8,000/- பணம் கேட்ட நாமக்கல் மாநகராட்சி அலுவலக வருவாய் உதவியாளர் திரு.உதயகுமார் என்பவரை அவர் கேட்ட லஞ்சப் பணம் ரூ.8,000/-த்துடன் இன்று நேரில் சந்திக்க இருக்கிறேன், எனவே அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxx (B.Boopathivasan) 2/6/26.

Sir,

I received the above computer typed complaint on 02.06.2026 at 08.55 hrs and the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity of the accused was also verified through sources and which is learnt to be not good. The motive and antecedents of the complainant with the accused have been checked carefully and found nothing adverse. Hence, I obtained oral concurrence from the DVAC, Chennai and I

registered a case in Namakkal Vigilance and Anti-Corruption Crime No.04/AC/2026, u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 02.06.2026 at 09.30 hrs against the accused Tr.Udhayakumar, Revenue Assistant, Namakkal Municipal Corporation. Sd/-(xxxx) (S.Prabhu) 02/06/2026. Inspector of Police, V&AC., Namakkal.

The original FIR along with original computer typed complaint of the informant Tr.B.Boopathivasan are submitted to the Hon'ble Court of Principal District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned and I took up investigation.

02/06/26

(S. PRABHU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Namakkal.